செ.வெ.எண்:39 நாள்: 15.08.2017

**நாகப்பட்டினம் மாவட்டத்தில் நடைபெற்ற 71-வது சுதந்திர தின விழாவில் தேசியக் கொடியினை ஏற்றி வைத்து, தியாகிகளை கௌரவித்து, காவல்துறை அணிவகுப்பு மரியாதையை ஏற்று 96 பயனாளிகளுக்கு ரூ.64 இலட்சத்து 16 ஆயிரத்து 973 மதிப்பீட்டில் நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.சீ.சுரேஷ்குமார்,இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.**

நாகப்பட்டினம் மாவட்ட விளையாட்டு அரங்கில் 15.08.2017 அன்று நடைபெற்ற 71-வது சுதந்திரதின விழாவில் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.சீ.சுரேஷ்குமார்,இ.ஆ.ப., அவர்கள் தேசியக்கொடியை ஏற்றிவைத்து காவல்துறையினரின் அணிவகுப்பை பார்வையிட்டு மரியாதையை ஏற்றுக்கொண்டு 09 சுதந்திர போராட்ட தியாகிகளை சால்வை அணிவித்து கௌரவித்து 96 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கி பள்ளி மாணவ - மாணவியர்களின் கலை நிகழ்ச்சிகளை கண்டுகளித்தார்.

சுதந்தர தின விழாவில் வருவாய்த்துறையில் 8 நபர்களுக்கும், காவல்துறையில் சிறப்பாகப் பணியாற்றிய 27 நபர்களுக்கும், ஊரக வளர்ச்சித் துறையில் 06 நபர்களுக்கும், கால்நடை பராமரிப்புத் துறையில் 2 நபர்களுக்கும், மாற்றுத் திறனாளிகள் நலத்துறையில் 1 நபருக்கும், சுகாதாரத்துறை மற்றும் குடும்பநலத்துறையில் 10 நபர்களுக்கும், சர்வதேச அளவில் நடைபெற்ற பள்ளிகளுக்கிடையேயான கடற்கரை கையுந்துபந்து போட்டிகளில் சிறப்பிடம் பெற்ற வீரர் வீராங்கனைகள் 2 பேருக்கும் ஆக மொத்தம் 56 நபர்களுக்கு பாராட்டுச் சான்றிதழ்களை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் வழங்கினார்.

அதனைத் தொடர்ந்து, மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் 2 பயனாளிகளுக்கு தலா ரூ.4,236 மதிப்பலான விலையில்லா தையல் இயந்திரம் மற்றும் 1 பயனாளிக்கு ரூ.6,500 மதிப்பலான மூன்று சக்கர சைக்கிள் என 3 பயனாளிகளுக்கு ரூ. 14 ஆயிரத்து 972 மதிப்பீட்டிலும், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் சார்பில் 4 பயனாளிகளுக்கு தலா ரூ.4,800 மதிப்பிலான விலையில்லா சலவைப் பெட்டி ரூ.19 ஆயிரத்து 200 மதிப்பிலும், வேளாண்மைத் துறையின் சார்பில் வேளாண் உபகரணங்கள், விதைநெல் மற்றும் இடுபொருட்கள் என 5 பயனாளிகளுக்கு ரூ.31 ஆயிரத்து 142 மதிப்பீட்டிலும், கூட்டுறவுத்துறையின் சார்பில் 4 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.6 லட்சத்து 50 ஆயிரம் மற்றும் மாற்றுத்திறனாளிகள் 3 பேருக்கு ரூ. 1 லட்சத்து 25 ஆயிரம் என மொத்தம் ரூ.7 லட்சத்து 75ஆயிரம் மதிப்பிலும், சமூக நலத்துறை சார்பில் முதலமைச்சரின் பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் 10 குழந்தைகளுக்கு தலா ரூ.25,000 வீதம் அவர்தம் பெற்றோர் 5 பேருக்கு ரூ.2 லட்சத்து 50 ஆயிரம் மதிப்பிலான வைப்புத் தொகை இரசீதுகளும், தாட்கோ நிறுவனம் மூலம் சுயதொழில் செய்வதற்கு வாகனம் வாங்கிட 4 பயனாளிகளுக்கு ரூ.24 லட்சத்து 41 ஆயிரத்து 015 மதிப்பிலும், மகளிர் திட்டம் மூலம் 5 மகளிர் சுயஉதவிக்குழுக்களுக்கு ரூ.13 லட்சத்து 65 ஆயிரம் மதிப்பிலான கடனுதவிகளும், தோட்டக்கலைத்துறை சார்பில் 2 பயனாளிகளுக்கு ரூ.20 ஆயிரத்து 644 மதிப்பிலான பாசனக் கருவிகளும், மாவட்டத் தொழில் மையத்தின் சார்பில் தொழில் தொடங்கிட 5 நபர்களுக்கு ரூ.15 லட்சம் கடனுதவியும் என ஆக மொத்தம் 96 பயனாளிகளுக்கு ரூ. 64 லட்சத்து 16 ஆயிரத்து 973 மதிப்பிலான நலத்திட்ட உதவிகளையும் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.சீ.சுரேஷ்குமார்,இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.

இவ்விழாவில் மேலையூர் சீனிவாசா மேல்நிலைப்பள்ளி, நாகப்பட்டினம் அமிர்தா வித்யாலயா மேல்நிலைப்பள்ளி, நாகப்பட்டினம் அன்னை சத்யா அரசு காப்பகம், நாகப்பட்டினம் ஸ்ரீமதி பத்மாவதி வித்யாலயா மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி, நாகூர் கிரசன்ட் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி, தரங்கம்பாடி தூய தெரசா மேல்நிலைப்பள்ளி, திருமங்கலம் அரசினர் மகளிர் மேல்நிலைப் பள்ளி, மயிலாடுதுறை ராஜ் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, செம்பனார்கோவில் கலைமகள் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி, நாகப்பட்டினம் நடராஜன் தமயந்தி உயர்நிலைப் பள்ளி, திருக்கண்ணபுரம் ஊராட்சி ஒன்றியத் தொடக்கப்பள்ளி உள்ளிட்ட 7 பள்ளிகளைச் சேர்ந்த மாணவ - மாணவிகளின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது.

இவ்விழாவில் நாகப்பட்டினம் சட்டமன்ற உறுப்பினர் திரு.எம்.தமிமுன் அன்சாரி, மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் திரு.தேஷ்முக் சேகர் சஞ்சய்,இ.கா.ப, மாவட்ட வருவாய் அலுவலர் திரு.எஸ்.கருணாகரன், மாவட்ட தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை அலுவலர் திரு.முகுந்தன், நாகப்பட்டினம் வருவாய் கோட்டாட்சியர் திரு.சி.கண்ணன், தமிழ்நாடு ஊர்க்காவல்படை மண்டல தளபதி, திரு.ஆனந்த் மற்றும் அனைத்து துறை அரசு அலுவலர்கள், பொதுமக்கள், பள்ளி மாணவ - மாணவியர்கள் ஆகியோர் கலந்துக் கொண்டனர்.

**செய்தி வெளியீடு :- செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நாகப்பட்டினம்.**